செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-52 ஏப்ரல், 2025

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஸ்தாபன தின புரட்சிகர வாழ்த்துக்கள் – 20 ஏப்ரல் 2025

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது ஸ்தாபன தினம் ஒற்றுமை மற்றும் போர்க்குணமே நம்மை என்றென்றும் வழிநடத்தும்

20-04-1946 அன்று துவங்கப்பட்ட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம், எழுபத்து ஒன்பது ஆண்டுகளைக் கடந்து இம்மாதம் ஏப்ரல் இருபதாம் நாளன்று, **80**ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது.

மிகவும் கடினமான சவால்கள் நிறைந்த பின்னணியில், தியாகம் புரிந்த நம் தலைவர்களின் வழிகாட்டுதல்கள் மூலம் இதுகாறும் கடந்து வந்த நம் சங்கத்தின் வெற்றிப் பாதையினை பின்னோக்கிப் பார்க்கையில், அது நமக்கு உற்சாகமூட்டும் விதத்திலும், ஊக்கமளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.



வங்கி நிர்வாகங்களின் உழைப்புச் சுரண்டலால் அல்லற்பட்டுக் கொண்டிருந்த ஊழியர்களை, தொழிற்சங்க இயக்கம் எனும் பாதுகாப்பு குடையின் கீழ் அணிதிரட்டுதல் மற்றும் ஒன்றிணைத்தல் ஆகியவையே நம் தொடர்ச்சியான பாதையாக இருந்து வருகின்றது. வங்கி ஊழியர்களின் பொருளாதார நிலைமைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான இடைவிடாத போராட்டங்கள் நம் சங்கத்தின் அங்கமாக இன்றளவும் தொடர்கின்றது.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட இடைவிடாத கடுமையான போராட்டங்களின் விளைவாக, இந்திய நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக **1969**ம் ஆண்டில் பெரும் தனியார் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் குறிப்பிடத்தக்க சாதனை ஆகும்.

தியாகத்தின் உருவகமாக இருந்த நமது ஸ்தாபனத் தலைவர்கள், தொழிலாளி வர்க்க அமைப்பு முறையை பாதையாக ஏற்றுக்கொண்டு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை கட்டியெழுப்பினர். அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் போராட்டங்களால் வங்கி ஊழியர்களின் அன்றைய மோசமான வாழ்க்கை நிலையிலிருந்து பாதுகாப்பான பணிவிதி முறைகள், அடிமைத்தனத்திலிருந்து கண்ணியமான பணி நிலைமை, நியாயமான ஊதியம் வேண்டி மண்டியிட்ட நிலைமையினை மாற்றி கூட்டு பேர உரிமை, அற்ப ஊதியத்திலிருந்து சிறந்த ஊதியம் மற்றும் உயரிய நிலைமைகளை பெறமுடிந்தது.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகளால், வங்கி ஊழியர்களை ஒன்றிணைத்து, அணி திரட்டி, வங்கி ஊழியர்களின் பொருளாதார நிலைமைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான தொடர்ந்த கடுமையான போராட்ட நடவடிக்கைகளின் விளைவாக 1966ம் ஆண்டு முதன்முறையாக இருதரப்பு ஊதிய ஒப்பந்தம் ஏற்பட்டது.

1946ம் ஆண்டு தொடங்கி 1966 வரை இருபது ஆண்டு கால தீவிரமான போராட்டங்களுக்குப் பின்னரே இந்த கூட்டு பேரம் மற்றும் இருதரப்பு ஒப்பந்த முறை எட்டப்பட்டது. 1966ம் ஆண்டில் முதலாவது இருதரப்பு ஒப்பந்தம் முதற்கொண்டு, 2024ம் ஆண்டு பனிரெண்டாவது இருதரப்பு ஒப்பந்தம் வரை அனைத்து பனிரெண்டு இருதரப்பு ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்ட ஒரே தொழிற்சங்கம் நமது AIBEA என்பது நாமனைவரும் பெருமைகொள்ளக்கூடியதாகும்.

எண்பதாவது ஸ்தாபன தினத்தை நாம் கொண்டாடும் போது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு 1964ல் நடந்த அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 13வது மாநாட்டில் வங்கி ஊழியர்களுக்கு இருதரப்பு ஊதிய ஒப்பந்த முறையை கோரி அறைகூவல் விடுத்த தோழர் பிரபாத்கர் மற்றும் தோழர் பர்வானா ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்வது நமது அனைவருடைய கடமையாகும்

நமது கோரிக்கைகளை வென்றெடுக்க, வங்கி நிர்வாகங்களுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்திட வழிவகை செய்யும் கூட்டுபேர இருதரப்பு ஒப்பந்த முறையினை தொடர்ந்து பாதுகாத்திட வேண்டும் என்பதே அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தலையாய நோக்கமாக இருந்து வந்துள்ளதை நாமறிவோம்.

தொடரும் நம் பயணத்தில் நாம் எதிர்கொண்ட பல்வேறு அரசாங்கங்கள் மற்றும் நிர்வாகங்களின் தாக்குதல்களை நமது ஒற்றுமை மற்றும் போர்க்குணத்தால் எதிர்கொண்டு வெற்றி பெற்றுள்ளோம். நம்மை பலவீனப்படுத்தி நம் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சிகள் அனைத்தையும் முறியடித்து நம் உறுப்பினர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினை மென்மேலும் வலுவுள்ளதாக பேணிக் காக்கின்றனர்.

அதேபோல், நம் ஸ்தாபனத் தலைவர்கள் நமக்குப் பயிற்றுவித்த, தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்வதோடு, சுரண்டல் இல்லாத சமூகத்திற்காகப் போராட வேண்டும் என்றும், நீதி, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியதை தொடர்ந்து நம் உறுப்பினர்கள் கடைபிடித்து வருகின்றனர்.

ஒற்றுமையை பலப்படுத்துவோம் - தாக்குதல்களை முறியடிப்போம்:

பொதுத்துறை வங்கிகளை தனியார்மயப்படுத்தும் திட்டங்கள் மூலம், பொதுமக்கள் சேமிப்பிற்கு பாதுகாப்பற்ற நிலையினை ஏற்படுத்துவதோடு மட்டுமின்றி, வங்கிகளில் கடன் வாங்கி வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாத பெரும் கார்பொரேட் பேர்வழிகளிடமே பொதுத்துறை வங்கிகளை தாரைவார்க்கும் முயற்சியில் தற்போதைய ஒன்றிய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

இந்த பிற்போக்குத்தனமான கொள்கைகளை எதிர்த்துப் போராடுவது நம்முன் உள்ள மற்றொரு சவாலான பணியாகும். 80வது ஸ்தாபன தினத்தினை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் சந்தர்ப்பத்தில், நம் முன் உள்ள சவால்களை எதிர்கொள்ள நம்மை தயார்ப்படுத்துவதற்கான உறுதிமொழியை ஏற்போம்.

தற்போதைய இளம் தலைமுறை வங்கி ஊழியர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும், நாம் வென்றெடுத்த உரிமைகளை தக்கவைப்பதற்கும் போராட்டத்தைத் தொடர்வது நமது கடமையாகும். இந்த ஸ்தாபன நாளில் இதற்கான நமது உறுதிமொழியைப் புதுப்பிக்கவும், அதிகரித்து வரும் சவால்களைச் சந்திக்க நமது அமைப்பை மேலும் வலுப்படுத்தி நமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தவும் சூளுரை ஏற்போம்.



“அமைப்பு இல்லையேல் நாம் நிராயுதபாணிகள்.
அமைப்பாகத் திரண்டால் நாம் பெரும் போர்ப்படை.
போராட்டங்களே நம் ஆயுதம் - ஒற்றுமைதான் நமது கவசம்”
- தோழர் பிரபாத்கர்.

மார்ச் 24 மற்றும் 25, 2025 அன்று நடைபெறவிருந்த வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு மத்திய தொழிலாளர் ஆணையர் ஆலோசனையை ஏற்று UFBU முடிவு

2025, மார்ச் 24 மற்றும் 25, UFBU சார்பாக அறிவிக்கப்பட்ட நாடு தழுவிய இரண்டு நாட்கள் வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகள் வேலை நிறுத்தம் தொடர்பாக IBA/வங்கி நிர்வாகங்கள் மற்றும் UFBU இடையே தலைமை தொழிலாளர் ஆணையரால் ஏற்பாடு செய்யப்பட்ட சமரசக் கூட்டம் 18-3-2025 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் நம் கோரிக்கைகள் குறித்து உடன்பாடு எதுவும் எட்டப்படாமையால், சமரசக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, 21-3-2025 அன்று புது தில்லியில் உள்ள மத்திய தொழிலாளர் ஆணையர் (CLC) அலுவலகத்தில் மற்றொரு சுற்று சமரசக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் **UFBU** சங்கத் தலைவர்களுடன் தலைமை தொழிலாளர் ஆணையர், நிதி அமைச்சகம், **IBA**, **DFS** பிரதிநிதிகள் மற்றும் அனைத்து வங்கி நிர்வாகங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



வேலைநிறுத்தக் கோரிக்கைகளுள் ஒன்றான வாரத்திற்கு ஐந்து நாள் வங்கிச் சேவை குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடைபெற்றது. இக்கோரிக்கை **IBA**வால் ஒரு வருடம் முன்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தாலும், **IBA** பரிந்துரைத்த இந்தக் கோரிக்கையை ஒன்றிய அரசாங்கம் தீர்க்காது உள்ளது, **IBA** மற்றும் **UFBU** இடையே ஏற்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்தினை உதாசீனப்படுத்துவதற்கு சமம் என்று **UFBU** கண்டனம் தெரிவித்தது.

வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் கிளை மேலாளர்கள் வேலை மிகுதியின் காரணமாக அதிக மன அழுத்தத்துடன் பணிபுரியும் தற்போதைய சூழ்நிலையில், வாரத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறைக்கான கோரிக்கை அத்தியாவசியமானது என்பதையும் **UFBU** சுட்டிக்காட்டியது.

இப்பிரச்சினையினை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிய, **DFS** இன் மூத்த அதிகாரிகள் சமரசக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று தலைமை தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொண்டார். அதனை ஏற்று, **DFS**ன் மூத்த இணைச் செயலாளர் ஒருவர் காணொளி மூலம் கூட்டத்தில் பங்கேற்று, இக்கோரிக்கை நிதி அமைச்சர் உட்பட அரசாங்கத்தின் தீவிர கவனத்தைப் பெற்று வருவதாக தெளிவுபடுத்தினார்.

ஆண்டுதோறும் பொதுத்துறை வங்கிகளில் வணிகம் பெருமளவில் அதிகரித்த போதிலும் எழுத்தர் மற்றும் துணைநிலை ஊழியர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதை சுட்டிக்காட்டி, பணியாளர் பற்றாக்குறையால் தற்போதுள்ள ஊழியர்களின் மிகுதியான பணிச்சுமை காரணமாக அலுவலக நேரத்திற்குள் ஊழியர்கள் தங்கள் வேலையை முடிக்க முடியாத நிலை, மற்றும் அதிகாரிகள், எழுத்தர், காசாளர் மற்றும் காவலாளர் சேவைகளில் ஏற்படும் தாமதம் காரணமாக வாடிக்கையாளர் சேவை பாதிக்கப்படுவதால் ஆங்காங்கே கிளைகளில் ஊழியர்கள் தாக்குதல்களுக்கு ஆளாவது குறித்து **UFBU** தன்னுடைய கண்டனத்தினை தெரிவித்தது.

பல கிளைகளில், துணைநிலை ஊழியர், ஆயுதக் காவலர் அல்லது பகுதி நேர துப்புரவுப் பணியாளர்கள் ஒருவர் கூட இல்லாத நிலையில் வங்கிக் கிளைகள் செயல்படுகின்றன என்பது சுட்டிக்காட்டப்பட்டது. இந்தக் காலியிடங்களில் போதுமான நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை **UFBU** வலியுறுத்தியது. அதனையடுத்து வங்கி நிர்வாகங்களுடன் ஊழியர் நியமனம் தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ள **IBA** ஒப்புக்கொண்டது.



மேலும், ஒப்பந்தங்களை உதாசீனப்படுத்தி, வங்கி நிர்வாகத்தின் உயர்நிலை அதிகாரிகளுக்கான நியாயமற்ற பாரபட்சமான **PLI** வழங்குவது குறித்த **DFS** வெளியிட்ட சமீபத்திய வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்வதற்கு **DFS**-க்கு பரிந்துரைக்க **IBA** ஒப்புக்கொண்டது.

UFBU வின் வேலைநிறுத்த அறிவிப்பில் எழுப்பப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படும் வகையில், **IBA**, **DFS** பிரதிநிதிகளை தலைமை தொழிலாளர் ஆணையர் **(CLC)** தொடர்ந்து கண்காணிக்க ஒப்புக்கொண்டதை கருத்தில் கொண்டு, வேலைநிறுத்த நடவடிக்கை மற்றும் கிளர்ச்சித் திட்டங்களை சுமார் இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்க **UFBU** முடிவு செய்தது.



மத்திய தொழிலாளர் ஆணையருடனான சமரசப் பேச்சுவார்த்தை மீண்டும் இம்மாதம், ஏப்ரல் **22** அன்றைய தினம் புது டில்லியில் நடைபெற உள்ளது. வரும் நாட்களில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகளில் திருப்திகரமான முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், **UFBU** மீண்டும் போராட்டம் மற்றும் வேலைநிறுத்த நடவடிக்கைகளைத் தொடர்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. பேச்சுவார்த்தை தொடர்பான விபரங்கள் அவ்வப்போது தோழர்களுக்கு சுற்றறிக்கை வாயிலாக தெரியப்படுத்தப்படும்.

சர்வதேச மகளிர் தினம் - சென்னை, கடலூர், கோவையில் சிறப்புக்கூட்டம் மற்றும் நலத்திட்ட நிகழ்ச்சிகள்

சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் விதமாக கடந்த 2025 மார்ச் 6 ஆம் தேதி சென்னையில் சிறப்புக் கூட்டத்திற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது. இச்சிறப்புக் கூட்டத்தில் 120 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் புகழ்பெற்ற முன்னாள் நீதியரசர் ஜஸ்டிஸ் K சந்துரு அவர்கள் இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

ஜஸ்டிஸ் K சந்துரு அவர்கள் தனது உரையில், வங்கித் துறையில் இருதரப்பு ஒப்பந்த முறை தொடங்குவதற்கு முன்பு வங்கி ஊழியர் கடந்துவந்த ஊதிய திருத்தத்தின் வரலாற்றை நினைவு கூர்ந்தார். மேலும் 1969ம் ஆண்டு வங்கிகள் தேசியமயம் ஆக்கப்பட்டதில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வெகுவாகப் பாராட்டினார்.





பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு பயனுள்ள தீர்வை உறுதி செய்வதற்காக அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நீதித்துறை அமைப்பு ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை ஜஸ்டிஸ் K சந்துரு அவர்கள் வலியுறுத்தினார். இந்திய நாட்டில் பெண்களின் நலனுக்காகவும், பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்காகவும் பல சட்டங்கள் உருவாவதற்கு வழிவகுத்த பல்வேறு போராட்ட நிகழ்வுகளையும் அவர் விளக்கினார்.

பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதில் பெண் நீதிபதிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜஸ்டிஸ் K சந்துரு அவர்கள், தற்போதுள்ள 34 உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் 2 பெண் நீதிபதிகள் மட்டுமே உள்ளதை சுட்டிக்காட்டி, நீதித்துறை அமைப்பில் பாலின பாகுபாடு அகற்றப்பட வேண்டும் என்று கூறினார்.

பெண் தோழர்கள், தங்களுடைய பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவும், அவற்றிற்கு சித்தாந்த அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டறியவும் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார். மேலும் பெண்கள் சர்வதேச அரசியலையும் புரிந்துணர வேண்டும் என்றும் அவர் கூறினார்.



பெண்களுக்கு அவர்களின் பிரச்சினைகளை திறம்பட நிவர்த்தி செய்ய அதிகாரம் தேவை என்பதை அனைவரும் உணர்ந்து அதனை உறுதிசெய்ய வேண்டும் என்றும் அதனை அடைவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜஸ்டிஸ் சந்துரு அவர்கள் கூறினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் பெண் தோழர்களை வாழ்த்தி உரையாற்றினார். பிப்ரவரி **8** மற்றும் **9, 2025** அன்று அகமதாபாத்தில் நடைபெற்ற **AIBEA**வின் **9**வது தேசிய மகளிர் மாநாட்டில் பெருமளவிலான பெண் உறுப்பினர்கள் ஆர்வமுடன் பங்கேற்றது குறித்து தனது மகிழ்ச்சியை தெரிவித்தார்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்கள், தன்னுடைய வாழ்த்துரையில், பாலின சமத்துவத்தை நோக்கிய நடவடிக்கைகளத் துரிதப்படுத்த வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளில் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

சமூக நலப் பணிக்காக தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் நன்கொடை:

சர்வதேச மகளிர் தினமான மார்ச் **8, 2025** அன்று, சென்னை கொளத்தூரில் அமைந்துள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்கு பாதுகாப்பு, வாழ்க்கைத் துணை வழிகாட்டுதல் மற்றும் கல்வி ஆதரவை வழங்கும் குழந்தைகள் நல இல்லத்தில், **"THE CHILD"** என்ற சமூக அடையாளத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.



இம்முயற்சியினை ஆதரித்து அவர்களுக்கு உதவிடும் வகையில், நல இல்லக் கட்டிடத்தினை பழுது பார்ப்பதற்கும், நல இல்லத்தில் தங்கியுள்ளோருக்கு உணவு வழங்குவதற்கு உதவிடும் நோக்கத்தில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் சார்பாக, தொண்டு நிறுவனத்திற்கு ரூ **25000** நன்கொடை அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் **TNBEF** மகளிர் அமைப்பின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் மகளிர் தின விழா:

சர்வதேச மகளிர் தினத்தினைக் குறிக்கும் வகையில் கடலூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம், இந்தியன் வங்கி கடலூர் பிரதான கிளையில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் சிறப்புக் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. கடலூர் நகரத்தில் பணியாற்றும் பெருமளவிலான மகளிர் தோழர்கள் இக்கூட்டத்தில் ஆர்வமுடன் பங்கேற்று சிறப்பித்தனர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் தோழர் மீரா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கடலூர் நகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சர்வதேச மகளிர் தினம் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில், புதுச்சேரி ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தோழர் வத்சலா ரமணி, பாலின சமத்துவம் மற்றும் சர்வதேச மகளிர் தினத்தின் வரலாறு குறித்து உரை நிகழ்த்தினார். உளவியலாளர் திருமதி ரமா அவர்கள் உழைக்கும் பெண்களின் மனநல முக்கியத்துவம் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.



கடலூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பாக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய செவித்திறன் குறைபாடுள்ள மாணவிக்கு மருத்துவக் கல்வியில் சேருவதற்கான பயிற்சி வகுப்பு கட்டணத்திற்காக ரூ 10,000 நிதி உதவி வழங்கப்பட்டது.

கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் மகளிர் தின நலத்திட்ட உதவிகள்:

கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் மார்ச் 8, 2025 அன்று மாவட்ட சங்க அலுவலகத்தில் பல்வேறு நிகழ்வுகளுடன் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடியது.



மாவட்ட சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளை ஈடுபடுத்தும் வகையில் சதுரங்கப் போட்டி, குழந்தைகளுக்கான ஓவியப் போட்டி மற்றும் பெண் தோழர்களுக்கான பேச்சுப் பேச்சு போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.

CDBEA மகளிர் பிரிவின் அமைப்பாளர் தோழர் கிருத்திகா தலைமையில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின சிறப்புக் கூட்டத்தில் திருமதி நான்சி கோமகன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



சர்வதேச மகளிர் தினத்தினைக் குறிக்கும் விதமாக, கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பாக துடியலூரில் உள்ள கோவை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு மற்றும் அத்தியாவசிய எழுது பொருள்கள் வழங்கப்பட்டது. மேலும், கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள 'ஈர நெஞ்சம்' முதியோர் இல்லத்தில் வசிக்கும் பெண்களை கௌரவிக்குமுகமாக உணவுப் பொருட்கள், பழங்கள் மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

கோவை நகரில் பணி புரியும் ஏராளமான உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பரோடா வங்கி ஊழியர் சங்கத்தின் 48வது மாநில மாநாடு - சென்னை - 09-03-2025

பரோடா வங்கி ஊழியர் சங்கத்தின் 48வது மாநில மாநாடு கடந்த மாதம் **09-03-2025** அன்று சென்னையில் சிறப்புற நடைபெற்றது. மாநாட்டில் மாநிலம் முழுவதிலுமிருந்தும் ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.



மாநாட்டை அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தொடங்கி வைத்தார். தனது துவக்க உரையில், வங்கி ஊழியர்கள் கிளைகளில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துரைத்த தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் வங்கி தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பால் இரண்டு நாள் வேலைநிறுத்த அழைப்பு விடுக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்கினார்.

பொதுத்துறை வங்கிகளில் போதுமான எழுத்தர் மற்றும் துணைநிலை பணியாளர்களை நியமிக்க வேண்டியதன் அத்தியாவசிய மற்றும் அவசரத் தேவை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் ஒரு வருடத்திற்கும் மேலாக போராட்ட நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது என்றும், இப்பிரச்சினைகளை தீர்த்துவைக்க அரசாங்கமும், **IBA**வும் தொழிற்சங்கங்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்காத காரணத்தால் வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று கூறினார்.

பரோடா வங்கி ஊழியர் சங்க உறுப்பினர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் அனைத்துப் போராட்ட அறைகூவல்களையும் முழுமையாக கடைப்பிடித்து வருவதாகவும், அதற்காக சங்கத்தின் உறுப்பினர்களுக்கு தன்னுடைய பாராட்டினைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் தனது சிறப்புரையில், வங்கி ஊழியர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பொதுத்துறை வங்கிகளை தனியார் மயமாக்கும் அரசின் முயற்சிகள் குறித்தும், இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து வங்கி ஊழியர்கள் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



மேலும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம், மாநிலத்திலுள்ள வங்கி நகை மதிப்பீட்டாளர்களை ஒன்றிணைத்துள்ளதாகவும், அதனடிப்படையில், பரோடா வங்கியில் நகை மதிப்பீட்டாளர்கள் தங்களுக்கான தொழிற்சங்கம் நிறுவி, சிறப்பாக செயல்படுவதையும் பாராட்டினார். அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அடைய சம்மேளனம் உதவும் என்றும் கூறினார்.

மாநாட்டின் முடிவில் பரோடா வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராக தோழர் **K** பிரகாஷ் அவர்களும், பொதுச் செயலாளராக தோழர் **K P** சாய்குமார் அவர்களும், செயலாளராக தோழர் **J** சுரேஷ் குமார் அவர்களும், பொருளாளராக தோழர் **S** முரளி அவர்களும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பரோடா வங்கி ஊழியர் சங்கத்தின் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள நிர்வாகிகளுக்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக் குழுக் கூட்டம்
சென்னை - 16-03-2025

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக்குழுக் கூட்டம் **16-03-2025** அன்று **A K** நாயக் பவன், சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் அவைத் தலைவர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சம்மேளனத்தின் நிர்வாகிகள், மத்தியக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள், பொதுத்துறை வங்கிகளில் போதிய ஊழியர் நியமனம், வாரத்தில் ஐந்து நாள் வங்கிச் சேவை போன்ற நிலுவையிலுள்ள முக்கியமான கோரிக்கைகளுக்கான **UFBU** அறிவித்துள்ள போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தத்தின் முக்கியத்துவத்தினை விளக்கி இப்போராட்ட நடவடிக்கைகளில் நம் தோழர்கள் முழு அளவில் பங்கேற்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் பேசுகையில், ஒன்றிய அரசின் நிதித்துறை, ஒப்பந்தங்களுக்கு விரோதமாக வங்கி ஊழியர் பணிவிதி முறைகளில் தேவையற்ற தலையீடுகள் செய்வதாகவும், இவை தொழிலாளர் நலன்களுக்கு எதிரானது என்று கூறினார். இத்தகைய நடவடிக்கைகளை முறியடித்திட வேலைநிறுத்தப் போராட்டம் அவசியமானது என்றும் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இருபத்து நான்காவது மாநாட்டினை வரும் ஜூன் மாதம் 22 மற்றும் 23ம் நாட்களில் சென்னையில் நடத்துவது என்று மத்தியக் குழு முடிவு செய்தது.



மத்தியக் குழுக் கூட்டத்திற்கு முதல் நாள், மாவட்ட இணைப்புச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட சங்கங்களின் செயல்பாடுகள் குறித்தும் அவை சந்திக்கும் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. மாவட்ட சங்கங்கள் அனைத்தும் சம்மேளனத்தின் மாநாட்டிற்கு முன்பாக தங்களுடைய மாநாடுகளை நடத்திட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. UFBU அறிவித்த நாடு தழுவிய இரண்டு நாட்கள் வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்தினை வரவேற்று மத்தியக் குழு தீர்மானம் நிறைவேற்றியது.

IDBI வங்கி ஒப்பந்த ஊழியர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் - சென்னை - 23-03-2025

IDBI வங்கி ஒப்பந்த ஊழியர் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் கடந்த 23-03-2024 அன்று சென்னையில் நடைபெற்றது. தமிழ்நாடு வங்கி ஒப்பந்த ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் R கோவிந்தராஜ் அவர்கள் பொதுக் குழுக் கூட்டத்திற்கு தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார்.

தோழர் R கோவிந்தராஜ் அவர்கள் தனது உரையில், IDBI வங்கியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் நமது உறுப்பினர்களின் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் நமது சங்கம் அதிக அக்கறையுடன் செயல்படுவதை வெகுவாகப் பாராட்டினார். மேலும், IDBI வங்கியில் பணி புரியும் ஒப்பந்த ஊழியர்களுக்கு நிர்வாகம் நியாயமாக வழங்க மறுக்கும் சலுகைகளைப் பெற்றிட நமது சங்கம் தொழிலாளர் நல ஆணையர் முன்பாக தொழிற்தகராறு சட்டத்தின் அடிப்படையில் பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சாதகமான பல தீர்வுகள் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிட்டு, அதற்குக் காரணமான சங்க நிர்வாகிகளைப் பாராட்டினார்.



IDBI ஒப்பந்த ஊழியர் சங்கத்தின் செயலாளர் தோழர் K சத்யநாராயணன் தன்னுடைய அறிக்கையில் IDBI வங்கியில் ஒப்பந்த ஊழியர்களுக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட வேண்டிய ஊதியம், பஞ்சப்படி, போனஸ், பணிக் கொடை, விடுப்புச் சலுகைகள் ஆகியவற்றை IDBI நிர்வாகம் வழங்க மறுப்பதை எதிர்த்தும், சட்டத்திற்கு புறம்பாக சில SECURITY GUARD தொழிலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்தும் தொழிலாளர் நல ஆணையர் முன்பு தொழிற்தகராறு தாவாக்கள் எழுப்பப்பட்டு, பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதை எடுத்துரைத்தார்.

IDBI ஊழியர் சங்கத்தின் மாநிலச் செயலாளர் தோழர் **R P** கணேசன் அவர்கள் பொதுக்குழுவை வாழ்த்தி உரையாற்றினார். பொதுக்குழுவில் பெண் உறுப்பினர்கள் உட்பட ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.



பொதுக் குழுவின் முடிவில் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தலைவராகவும், சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **S D** ஸ்ரீநிவாசன் அவர்கள் துணைத் தலைவராகவும், தோழர் **K** சத்யநாராயணன் அவர்கள் செயலாளராகவும், தோழர் **N** ஸ்ரீராம் அவர்கள் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர். புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள **IDBI** வங்கி ஒப்பந்த ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டி வாழ்த்துகின்றது.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஒப்பற்ற தலைவர்

தோழர் N சம்பத் அவர்களின்

பிறந்த நாள் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம்

சென்னை - 26-03-2025

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் ஒப்பற்ற தலைவரும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் ஸ்தாபகத் தலைவர்களுள் ஒருவரான தோழர் **N** சம்பத் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டினை அனுசரிக்கும் வகையில் அவருடைய பிறந்த நாளான **26-03-2025** அன்றைய தினம் சென்னையில் சிறப்புக் கூட்டம் ஒன்றிற்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது.



சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிளைகளில் பணியாற்றும் ஏராளமான நம் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். தோழர்களால் நிரம்பி வழிந்த அரங்கில் நிகழ்ந்த இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் (**AITUC**) அகில இந்திய செயலாளர் தோழர் **T M** மூர்த்தி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தன்னுடைய துவக்கவுரையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் உட்பட சம்மேளனத்தின் தற்போதைய தலைவர்கள் பலரும் தோழர் **N** சம்பத் அவர்களால் அடையாளம் காணப்பட்டு அவரிடம் தொழிற்சங்கக் கல்வி பயின்றவர்கள் என்று புகழ்ந்துரைத்தார்.



தொழிற்சங்கத்தில் மிகக் குறைந்த நிதி வசதி இருந்த அன்றைய காலகட்டத்தில் தோழர் **N** சம்பத் அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கிடையே சங்கப் பணி ஆற்றியதை நினைவு கூர்ந்தார்.

தோழர் **N** சம்பத் அவர்கள் முயற்சினால் சம்மேளனத்தின் மகளிர் அமைப்பு **(WOMEN'S COUNCIL)** மற்றும் இளைஞர் அமைப்பு **(YOUTH LEAGUE)** ஆகிய அமைப்புகள் உருவாக்கப்பட்டு அவை மற்ற மாநில சம்மேளனங்களுக்கு முன்மாதிரியாக செயல்பட்டது என்று கூறினார்.

தோழர் **N** சம்பத் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டினையொட்டி, மதுரை புறநகரில் செயல்படும் ஆரம்பப் பள்ளி ஒன்றின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களுக்கு உதவிடும் நோக்கில், மாணவர்களுக்குத் தேவைப்படும் மேசை மற்றும் நாற்காலி வசதிகள் செய்து தருவதற்காக சம்மேளனம் நன்கொடை அளிப்பதாக தோழர் **E** அருணாசலம் அவர்கள் அறிவித்தார்.

தோழர் **T M** மூர்த்தி அவர்கள் தன்னுடைய உரையில், தோழர் **N** சம்பத் அவர்களின் எளிமை, நேர்மை, திறமை, கண்டிப்புடன் கூடிய தொழிற்சங்க அர்ப்பணிப்பு ஆகியவற்றை நினைவு கூர்ந்தார். பல்வேறு காலகட்டங்களில் தோழர் **N** சம்பத் அவர்களுடனான தன்னுடைய தொழிற்சங்க அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.



தோழர் **N** சம்பத் அவர்களின் தலைமைப் பண்பு, இளம் தோழர்களுடன் அவர் பழகிய மாண்பு, தொழிற்சங்க நடவடிக்கைகளில் அவருடைய நேர்மை ஆகியவற்றைக் குறிப்பிட்டு, இப்பண்புகள் எக்காலத்திலும் அனைத்துத் தலைவர்களாலும் பின்பற்ற வேண்டியவைகளாக அமைந்துள்ளது என்று தோழர் **T M** மூர்த்தி கூறினார்.

தோழர் **N** சம்பத் அவர்கள் பல்வேறு தொழிற்சங்கங்களுக்கும், குறிப்பாக தமிழ்நாடு **AITUC** சங்கத்திற்கு ஆரம்ப காலம் தொட்டு உறுதுணையாக இருந்ததை தோழர் **T M** மூர்த்தி அவர்கள் நினைவு கூர்ந்தார்.

பின்னர், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் தன்னுடைய சிறப்புரையில், வேலூர் கிளையில் தாம் வங்கிப் பணியில் இணைந்த நாள்தொட்டு தோழர் **N** சம்பத் உடனான தொழிற்சங்கப் பயணம் அவருடைய இறுதிக்காலம் வரை பல்லாண்டுகள் தொடர்ந்ததை நினைவுகூறி உரையாற்றினார். தொழிற்சங்க இயக்கத்தில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு தோழர் **N** சம்பத் அவர்கள் அனைவருக்கும் முன்மாதியாகத் திகழ்ந்தார் என்று புகழ்ந்துரைத்தார்.



மேலும் **UFBU** திட்டமிட்டிருந்த வேலைநிறுத்தப் போராட்டத்தின் முக்கியக் கோரிக்கைகளையும், அவை குறித்த **CLC** உடனான பேச்சுவார்த்தை விபரங்களையும் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் விளக்கினார். வங்கிக் கிளைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புவதன் மூலம் ஊழியர்களுடைய பணிச் சுமையினை சீர்படுத்தி அவர்களுடைய உடல்நலன் மற்றும் மன நலம் காப்பதே நாம் வைத்துள்ள கோரிக்கைளுள் முதன்மையானது என்பதை தோழர்கள் உணர்ந்திட வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

கூட்டத்தில் தோழர் **N** சம்பத் அவர்களுடன் நெருங்கிப் பழகிய முதுபெரும் தோழர் **V S** பாலசுப்ரமணியன் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன், அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத் தலைவர் தோழர் தவே, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொருளாளர் தோழர் **K** ஸ்ரீகிருஷ்ணா, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **S D** ஸ்ரீநிவாசன், பேங்க் ஆப் இந்தியா ஊழியர் சங்கத்தின் தமிழ்நாடு பொதுச் செயலாளர் தோழர் **P C** ஸ்ரீதர் ஆகியோர் உரையாற்றினர்.



தோழர் **N** சம்பத் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களை மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சிறப்புக் கூட்டங்கள் மற்றும் சமூக நலப்பணிகள் மூலம் இவ்வருடம் முழுவதிலும் அனுசரித்திட தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

தமிழ்நாடு அரசு கூட்டுறவு சங்கங்களின் மாநிலப் பதிவாளருடன் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் சந்திப்பு

புதிதாக பொறுப்பேற்றுள்ள கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு K நந்தகுமார் IAS அவர்களை கடந்த 07.03.2025 மற்றும் 21.03.2025 ஆகிய நாட்களில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது நிலுவையில் உள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பணிநிலைத் திறன் மாற்றியமைத்திடவேண்டும், கூட்டுறவு வங்கிகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடவேண்டும், தற்போதைய மைய வங்கியியல் சேவையிலுள்ள குறைகள் களையப்படவேண்டும். நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் ஊதிய ஒப்பந்தங்களை விரைவு படுத்திடல் வேண்டும், மதுரை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் துத்துக்குடி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதிய ஒப்பந்த நிலுவைத் தொகையினை விரைந்து வழங்கிடவேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மேலும், மத்திய கூட்டுறவு வங்கிகளில் 3:1 விகிதத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள உதவி மேலாளர் பதவியிடங்களையும், நகர கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள உயர் பதவி இடங்களையும் பதவி உயர்வுகள் மூலம் நிரப்பிடவேண்டும், மத்திய கூட்டுறவு வங்கிகளில் உள்ள பொதுப் பணிநிலை திறன் பொதுமேலாளர் பதவி வரை மட்டுமே செயல்படுத்த வேண்டும், கூட்டுறவு வங்கிகளில் முதன்மை செயல் அலுவலர்கள் (CEO) தேசிய வங்கி / ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட FIT AND PROPER CRITERIA முறையில் பணியமர்த்தப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், கூட்டுறவு வங்கிகளில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியமாக மாதம் ரூ.10000/- வழங்கிடவேண்டும் எனவும், தற்போது பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு மாற்று ஓய்வூதியத் திட்டத்தினை அமுல்படுத்துவதுடன், கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டம் அமுல்படுத்திட வேண்டும் போன்ற நம்முடைய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

நாம் முன்வைத்த கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் விளக்கங்களை கேட்டுப் பெற்றுக்கொண்ட பதிவாளர் அவர்கள் பொதுவாக நமது கோரிக்கைகள் அனைத்தும் ஏற்புடையதாக தோன்றுவதாகவும், இக்கோரிக்கைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக விவாதித்து முடிவு எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் மகளிர் மாநில மாநாடு
கோயம்புத்தூர் - 18-05-2025

தமிழக கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் மகளிர் எண்ணிக்கை சமீபகாலமாக மிகக் கணிசமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக நமது மாநிலத்தில் வேலை வாய்ப்புகளில் முப்பது சதவீத இட ஒதுக்கீடு மகளிருக்கு அளிக்கப்பட்டுள்ள காரணத்தால் ஏனைய மாநிலங்களைவிட நமது மாநிலத்தில் மகளிர் முன்னேற்றம் விரைந்து நடைபெற்று வருகின்றது.

AIBEA தொழிற்சங்க அமைப்புகளிலும், அவற்றின் நடவடிக்கைகளிலும் மகளிரின் பங்களிப்பு அளப்பற்கரியது. பல மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கங்களில் பாதிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பெண்களே ஆவர். **AIBEA** தலைமை நாடு முழுவதும் தொழிற்சங்கங்களில் மகளிருக்கு உரிய அங்கீகாரம் அளித்து அவர்களை பெருமளவு ஊக்குவித்து வருகின்றது.



கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பெண்கள் எதிர்கொண்டுவரும் சவால்கள், அவர்களின் பிரத்யேக பிரச்சனைகள் மற்றும் தொழிற்சங்க இயக்கத்தில் அவர்களது கூடுதல் பொறுப்புகள் ஆகியவை குறித்து விவாதித்து உரிய முடிவுகள் எடுக்க ஏதுவாக கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் மகளிர் தோழியர்கள் மாநாடு வரும் மே மாதம் **18** ஆம் தேதி ஞாயிற்று கிழமை **(18-05-2025)** கோயம்புத்தூர் மாநகரில் ஆர்.எஸ்.புரம் கோவை நகரத்தார் சங்கம் கூட்டரங்கில் நடைபெற உள்ளது.

இம்மாநாட்டில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்களும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்களும், **AICBEF** பொதுச் செயலாளர் தோழர் **K V S** இரவிக்குமார் அவர்களும், **TNBEF** மகளிரணி பொறுப்பாளர் தோழியர் **J** விஜயலட்சுமி அவர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இம்மாநாட்டில் பங்கேற்கும் பிரதிநிதிகள் பட்டியலை (பெயர், வயது, அலைபேசி எண்) இம்மாதம் ஏப்ரல் **15**ம் நாளிற்குள் மாநில சங்கத்திற்கு இணைப்புச் சங்கங்கள் அனுப்பி வைக்க வேண்டும். மேலும், கோவையில் மாநாடு நடைபெறும் நாளில் பிரதிநிதிகள் தங்குவதற்கு மாநில சங்கம் ஏற்பாடு செய்யும்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் நடத்திடும் இம் முதல் மகளிர் மாநாடு அனைத்து வகையிலும் வெற்றிபெறுவதற்கு இணைப்பு சங்கங்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும் என்று தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

தமிழக நிதி அமைச்சருடன்
தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் சந்திப்பு

தமிழக அரசு கடந்த **2021** ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கிகள் வழங்கியிருந்த ரூ **19,500** கோடி தொகையை தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்திருந்தது. அத்தொகையில் பெரும்பகுதி திரும்ப செலுத்தப்படாத காரணத்தினால் கூட்டுறவு வங்கிகளில் நிதி சுழற்சி பாதிக்கப்பட்டிருந்தது.

இப்பிரச்சனையை கடந்த **07-10-2024** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் நேரில் சென்று விளக்கியதுடன், இத்தொகையை தமிழக அரசு உடனடியாக விடுவிக்கவேண்டுமென்று கோரியிருந்தார். அதைத் தொடர்ந்து தமிழக அரசு சுமார் ரூ **4,000** கோடி கூட்டுறவு வங்கிகளுக்கு திரும்ப அளித்தது. எனினும் கூட்டுறவு வங்கிகளுக்கு மேலும் ரூ **3,662** கோடி தமிழக அரசிடமிருந்து வரவேண்டி உள்ளது.



இது தொடர்பாக கடந்த **26-03-2025** அன்று மாலை தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் நிதித்துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, மாநில அரசு கூட்டுறவு வங்கிகளுக்கு திரும்பச் செலுத்த வேண்டிய தொகையை உடன் வழங்கிட ஆவண செய்திட வேண்டுமென்றும் கோரினர்.

மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் அவர்கள் நமது கருத்துக்களை கவனமுடன் கேட்டறிந்து கொண்டதுடன் நமது கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விபரங்களை ஏற்றுக் கொண்டு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நமது மாநிலத்தின் பெருமைமிக்க வங்கி **(PRIDE BANK OF OUR STATE)** என்று தெரிவித்து, மாநில அரசுக்கு ஒன்றிய அரசிடமிருந்து வரவேண்டிய நிதி வராத காரணத்தினால் மாநில அரசுக்கு நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது என்றும், இருப்பினும் இக்குறுகிய காலத்தில் தமிழ்நாடு அரசு தேவையான முயற்சிகளை மேற்கொண்டு தீர்வுகாண முயலும் என்றும் தெரிவித்துள்ளார்.

நம் சந்திப்பினைத் தொடர்ந்து **30-03-2025** அன்று ரூ **1,104** கோடியை கூட்டுறவு வங்கிகளுக்கு தமிழ்நாடு அரசு விடுவித்துள்ளது.

நான்கு தொழிலாளர் குறியீடுகளை ரத்து செய் - இந்திய தொழிலாளர் மாநாட்டை நடத்துக
பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குவதை நிறுத்து
20-05-2025 பொது வேலை நிறுத்தம் - மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல்

மத்திய தொழிற்சங்கங்கள் **(INTUC, AITUC, HMS, CITU, AIUTUC, TUCC, SEWA, AICCTU, LPF, UTUC)** மற்றும் **AIBEA** உட்பட பல்வேறு சங்கங்கள் மற்றும் தொழிலாளர் கூட்டமைப்புகள் பங்கேற்ற மார்ச் **18, 2025** அன்று புது டில்லியில் தொழிலாளர்களின் தேசிய மாநாடு நடைபெற்றது.

இம்மாநாடு, ஒன்றிய அரசாங்கத்தின் தொடர்ச்சியான தொழிலாளர் விரோதக் கொள்கைகள் மற்றும் தொழிலாளர் குறியீடுகளை **(LABOUR CODES)** செயல்படுத்துவதற்கான திட்டங்களுக்கு எதிரான நமது போராட்டத்தையும் எதிர்ப்பையும் தொடரவும், **2025 மே 20 அன்று நாடு தழுவிய தொழிலாளர் பொது வேலைநிறுத்தம் அனுசரிக்கவும் அழைப்பு விடுத்துள்ளது.**

பொதுத்துறை நிறுவங்கள் மற்றும் வங்கிகள், காப்பீடு, நிலக்கரி, எஃகு, துறைமுகம் மற்றும் கப்பல்துறை, மின்சாரம், தொலைத்தொடர்பு, தபால், ரயில்வே, பாதுகாப்பு, சாலைகள், கல்வி, சுகாதாரம் போன்ற அரசுத் துறைகளின் தொழிற்சங்கங்கள் மற்றும் தனியார் முறைசாரா துறையைச் சேர்ந்த தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

மேலும், அந்தத் துறைகளில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், முறைசாரா மற்றும் அமைப்புசாரா துறைகளைச் சேர்ந்தவர்கள், தொழில்துறை மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் அங்கன்வாடி, ஆஷா போன்ற தொழிலாளர் தலைவர்களும் இதில் அடங்குவர்.



இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்தும் அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும், துறைசார் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து ஒன்றிய பா.ஜ.க அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, விவசாயி விரோத மற்றும் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக தங்களுடைய ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக இம்மாநாடு திகழ்ந்தது.

தொழிற்சங்கங்களின் தொடர்ச்சியான கோரிக்கைகளை பத்தாண்டுகளுக்கும் மேலாக வேண்டுமென்றே நிராகரிக்கும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டனக் குரல்கள் இக்கூட்டத்தில் ஒருமித்த குரலில் எழுந்தன. இந்த மாநாடு உழைக்கும் மக்களுக்கும் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நலனுக்கும் தீங்கு விளைவிக்கும் ஏகபோக முதலாளிகளுக்கு ஆதரவான ஒன்றிய அரசின் கொள்கைகளை கடுமையாக எதிர்த்தது. இந்தியாவின் உழைக்கும் மக்கள், செல்வந்தர்கள் மற்றும் பெரு முதலாளிகளால் தங்கள் படைப்புகள் கொள்ளையடிக்கப்படுவதை அனுமதிக்கக் கூடாது என்று மாநாடு வலியுறுத்தியது.



ஒன்றிய அரசாங்கத்தின் சவாலை எதிர்கொள்ள தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நாடு தழுவிய தீர்க்கமான போராட்டங்களுக்கான தொடக்கத் தளமாக **2025,** மே **20** பொது வேலை நிறுத்தம் அமையும் என்றும், சுரண்டல், சமத்துவமின்மை, அரசியலமைப்பு உரிமைகள் மறுப்பு மற்றும் இந்திய மக்களுக்கு இழைக்கப்படும் ஒட்டுமொத்த அநீதி ஆகியவற்றை எதிர்ப்பதற்கான போராட்டமாக இது அமையும் என்றும் இம்மாநாடு பிரகடனம் செய்ததது.

வேலையின்மை, வறுமை மற்றும் சமத்துவமின்மையினை உருவாக்கும் ஒன்றிய அரசின் கார்பொரேட் ஆதரவு மற்றும் தொழிலாளர் விரோதக் கொள்கைகளுக்கு எதிரான பிரகடனத்தை மாநாடு ஒருமனதாக ஏற்றுக்கொண்டது.

தொழிலாளர்களுக்கு விரோதமான தொழிலாளர் குறியீடுகளை **(LABOUR CODES)** ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துவதோடு, தொழிலாளர் கூட்டமைப்பின் பதினேழு அம்ச கோரிக்கையை நிறைவேற்றிட மாநாட்டில் பங்கேற்ற தலைவர்கள் வலியுறுத்தினர்.

ஒன்றிய பா.ஜ.க அரசாங்கம் உழைக்கும் தொழிலாளர்களை அடிமைப்படுத்தும் வகையிலான தனது தொழிலாளர் விரோத சட்டங்களை **(LABOUR CODES)** தீவிரமாக செயல்படுத்த முயல்கிறது. இந்தச்சட்டங்கள் தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளையும் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

இச்சட்டங்கள், வரையறுக்கப்பட்ட வேலை நிலைமைகள், வேலை நேரம், குறைந்தபட்ச ஊதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற அடிப்படை தொழிலாளர் உரிமைகளுக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. தொழிற்சங்கமயமாக்கல், தொழிற்சங்க அங்கீகாரம், கூட்டு பேர உரிமை மற்றும் வேலைநிறுத்தம் செய்யும் உரிமை ஆகிய போராடிப் பெற்ற உரிமைகளை அகற்றவும் இந்த சட்டங்கள் வழிவகை செய்கின்றன. தொழிலாளர்களின் எந்தவொரு கூட்டு எதிர்ப்புக்கும் எதிராக கடுமையான மற்றும் பழிவாங்கும் தண்டனைகளையும் அவை அறிமுகப்படுத்துகின்றன.

.


இப்புதிய தொழிலாளர் சட்டங்கள் உழைக்கும் மக்கள் மீது அடிமைத்தன நிலைமைகளை அமல்படுத்துவதற்காகவும், நிர்வாகங்கள் மற்றும் முதலாளிகளின் நலன்களுக்கு சேவை செய்வதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை முறியடிக்க, ஒன்றுபட்ட மற்றும் உறுதியான போராட்டங்களே நம் முன் உள்ள தீர்வாக மாநாடு கருதுகிறது.



மே 20, 2025 அன்று நடைபெறும் நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தின் வெற்றியை உறுதி செய்வதற்காக, தொழிலாளர்களை அணிதிரட்டுவதையும், வேலைநிறுத்தத்திற்கான உத்வேகத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட நாடு தழுவிய நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை மாநாடு பிரகடனப்படுத்துகின்றது.

நாடு முழுவதும் தொழிலாளர்களின் வலுவான, ஒருங்கிணைந்த இயக்கத்தை உருவாக்கவும், பொது வேலைநிறுத்தத்தில் அதிகபட்ச தொழிலாளர்களின் பங்கேற்பை உறுதி செய்யவும், தொழிலாளர் விரோத சட்டங்கள் மற்றும் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக தொழிலாளரின் ஒன்றுபட்ட குரலை வலுப்படுத்தவும் இப்போராட்ட நடவடிக்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் இத்தகைய தொழிலாளர் விரோதக் கொள்கைகளை எதிர்க்கவும், தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாக்கவும் இடைவிடாத போராட்ட நடவடிக்கைகளின் அவசியத்தை மாநாடு வலியுறுத்தியது.

25-03-2025 அன்று நடைபெற்ற அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டம், மத்திய தொழிற்சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தினையும், அதன் போராட்ட திட்டங்களையும் வரவேற்று தீர்மானம் நிறைவேற்றியது. இப்போராட்டங்கள் மற்றும் பொது வேலை நிறுத்தத்தில் வங்கி ஊழியர்களும் முழு அளவில் பங்கேற்று தங்களுடைய எதிர்ப்பினை வலிமையாக காண்பிக்கும் வகையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் போராட்டங்களுக்கு தோழர்கள் தங்களை தயார்ப்படுத்திக்கொள்ள சம்மேளனம் வேண்டுகின்றது.



"என் கூடு எரிகிறது
ஆனால் நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்
ஏனெனில்
தேவையானவர்களுக்கு அது
வெளிச்சத்தினை தருகின்றது"

தோழர் பர்வானா அவர்கள் கூட்டங்களில் அடிக்கடி கூறும் உருது மொழிக் கவிதை

தோழர் பர்வானா

50ஆம் ஆண்டு நினைவு நாள்

18-04-2025